தமிழ்நாடு ரப்பர் கழகம் அமைக்கும் திட்டம்.

104—*வினா எண். 18465 திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ரப்பர் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டத்தை நிர்வகிக்க, தன்னாட்சியுள்ள ஒரு தனி கழகமாக செயல்பட 25-2-83 நாளிட்ட வனம் மற்றும் மீன் துறை அரசு ஆணை எண். 221ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்தக் கழகத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இன்னும் அதற்கான செயல்வடிவம் எதுவும் தொடங்கப்படவில்லையே, அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான டயர்கள் இருக்கைகள் போன்ற இப்படிப்பட்ட தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு அந்தக் கழகத்தின் மூலம் ரப்பர் தேவையைப், பூர்த்தி செய்யலாமே. அது அரசாங்கத்திற்கு வருமானத்தையும் ஏற்படுத்துமே. இதன் காரணமாக உடனடியாக அதைச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே. கழகம் அமைத்து ஒரு ஆண்டு ஆகவில்லை. கழகம் அமைக்க வேண்டுமென்கிற முடிவை அரசு அறிவித்தது. அதற்குப் பிறகு அதுபற்றிய அடிப்படை விவரங்களையெல்லாம் சேகரித்து இப்போதுதான் அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவில் அது தனிக் கழகமாக செயல்படத் துவங்கும். ஆனால் அங்கே கிடைக்கிற ரப்பரைக் கொண்டு டயர் போன்ற பொருள்களைச் செய்யமுடியுமா என்பதையும் செய்தால் அது நமக்கு இலாபமாக இருக்குமா என்பதற்கும் தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் சொல்ல இயலும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரியில் இருக்கக்கூடிய ரப்பர் தோட்டங்களில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக போனஸ் இல்லாமல் பணியாற்றும் நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது ரப்பர் தோட்டக் கழகம் அமைப்பது பற்றிய மூலக் கேள்வி, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர் வழக்கம்போல் இந்த போனஸ் பிரச்னையை அதற்குள்ளே நுழைத்திருக்கிறார்கள் இருந்தாலும், அரசினுடைய நிர்வாகத்திற்கு உட்பட்ட ஒரு நிறுவனத்திற்கு போனஸ் கொடுக்க முடியாது. ஆகவேதான், உங்களுக்கு மகிழ்ச்சி தருகின்ற வகையிலே இந்த போனஸ் கொடுப்பதையெல்லாம் ஒரு பிரச்னையாக உள்ளடக்கி இது ஒரு கழகமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுக்கும் திட்டம்

105 *வினா எண்.—18746 திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலையில் வேட்டையாடுதலைத் தடுத்து வன விலங்குகளைஅதிகமாக வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கொல்லிமலையில் காப்புக் காடுகளில் வேட்டையாடுதலைத் தவிர்க்க, தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு, வனவிலங்குகள் பாதுகாக்கப்பட்டு இயற்யையாகவே வளர்ந்து பெருக வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்காலத்தில் அங்கே புலி, மான் போன்ற மிருகங்கள் இருந்தன. குறிப்பாக, தற்போது அங்கே காட்டுப் பன்றி, கரடி போன்ற மிருகங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இன்னும் அதிகமான பாதுகாப்பு கொடுத்து, புலி, மான் போன்ற மிருகங்களை வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கொல்லிமலைப் பகுதி 5 பகுதி களாகப் பிரிக்கப்பட்டு, அவைகளில் 3 ஏற்கனவே ஒதுக்கப்பட்ட காடுகளாக, ரிசர்வ் பாரஸ்டாக இருந்தது. மேலும் 2 பகுதிகளை ரிசர்வ் பாரஸ்டாக அறிவித்திருக்கிறோம். அதை ஒரு வனச் சரகமாக அறிவித்திருக்கிறோம். ஆகவே, இப்போது அங்கே வன விலங்குகளைப் பாதுகாக்கின்ற முயற்சிகள் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டை ஆடுவதைப் பொழுதுபோக்காக கருதுபவர்களுக்கு அரசாங்கம் சட்டதிட்டங்கள் போட்டு நிறுத்தலாம். ஆனால் சில பெரும் பணக்காரர்கள். சில உயர்மட்ட அதிகாரிகள்,

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS